பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.
[கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 07 வியாழக்கிழமை (23 08-2001) தொலைபேசி: 3378 ஒலி :255

## கண்ணிவெடியில் சிக்கிய பஸ்
### 9 பயணிகள் காயம்
### திருமலையில் சம்பவம்

(கொழும்பு)

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் 9 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று திருகோணமலையில் இருந்து இறக்கக்கண்டி நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஈஸ்ரேண்பஸ்கம்பனிக்கு சொந்தமான பஸ் ஒன்று நிலாவெளி 7 ம் கட்டைப்பகுதியில் காலை 11.10 மணியளவில் கண்ணிவெடியில் சிக்கிக்கொண்டதில் அதில்பயணம் செய்த 9 பேர் காயமடைந்தனர், காயமடைந்தவர்கள் அனைவரும் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், கண்ணிவெடியில் சிக்கிய பஸ் பலத்த சேதமடைந்துள்ளது.

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சரவைக் கூட்டத்தில் பெரும் பரபரப்பு வாக்குவாதம்
### ஜனாதிபதி வெளிநடப்புச் செய்தார்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைச்சரவைக் கூட்டம் நேற்று ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவின் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ஜனாதிபதிக்கும் சில அமைச்சர்களுக்குமிடையே காரசாரமான வாக்குவாதம் இடம்பெற்றதாகவும் இதனால் ஜனாதிபதி கோபமாக அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து வெளியேறிச் சென்று பின்னர் சில மணிநேரம் கழித்து மீண்டும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டதாகவும் கொழும்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதியுடன் வாக்குவாதப்பட்டுக்கொண்டு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே வெளியேறியிருந்தார்.

ஆனால் இம்முறை ஜனாதி

→ 8 ஆம் பக்கம் பார்க்க

★ ஐந்து ஆணைக் குழு ★ சர்வஜனவாக்கெடுப்பை ரத்துசெய்தல்
★ பாராளுமன்றைக் கூட்டுதல் உட்பட

# காபந்து அரசை உடன் அமைத்து
# பொதுத்தேர்தலை நடத்துக!

### பிரதமரின் கடிதத்திற்கு எதிர்க்கட்சிகள் பதில்

(கொழும்பு)

ஐந்து சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பதன் மூலம் குறுகிய காலத்திற்குள் தேர்தலை நடத்தவும் காபந்து அரசை அமைக்கவும் வேண்டும் என்ற அடிப்படையில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்றும், நாடாளுமன்றத்தை ஒத்திவைக்காது உடனடியாகக் கூட்டவேண்டும், என்றும் சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச்செய்யவேண்டும் என்றும் நேற்றைய எதிரணிக்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைக்க முன்வருமாறு பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்த கடிதம் நேற்று மாலை எதிர்க் கடசித் தலைவர்களினால் விரிவாக ஆராயப்பட்டது.

கொழும்புமாநகர மேயரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் ரணில்விக்கிரமசிங்கா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமசிங்காவின் தேசியநல்லிணக்க அரசு தொடர்பான கடிதம்குறித்து கட்சித்தலைவர்கள் தத்தம்

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## இன்று கூட்டம்

அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டமொன்றை ஜனாதிபதி இன்று கூட்டவுள்ளார்

இக்கூட்டத்தில் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென்றும் ஜனாதிபதி கேட்டுள்ளார். (ந-5)

## முக்கிய நிலையங்களை தாக்க புலிகள் திட்டம்
### புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், களனி மின்வலு நிலையம் போன்ற முக்கிய இடங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கப்போவதாக புலனாய்வுப் பிரிவினர் பாதுகாப்புப் படையினரை எச்சரித்துள்ளனர்.

புலனாய்வுப் பகுதியின் இவ்வெச்சரிக்கையை அடுத்து மேற்படி நிலையங்கள் பலத்த பாதுகாப்புக்குட் படுத்தப்பட்டுள்ளதுடன் இந்நிலையில் ஆர்ப்பாட்டங்களை கைவிடுமாறும் அரசுகேட்டுக்டுள்ளது. (ம)

கெடுப்பை ரத்துச்செய்யவேண்டும் என்றும் நேற்றைய எதிரணிக்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைக்க முன்வருமாறு பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்த கடிதம் நேற்று மாலை எதிர்க் கட்சித் தலைவர்களினால் விரிவாக ஆராயப்பட்டது.

கொழும்புமாநசர மேயரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் ரணில்விக்கிரமசிங்கா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமசிங்காவின் தேசியநல்லிணக்க அரசு தொடர்பான கடிதம்குறித்து கட்சித்தலைவர்கள் தத்தம்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், களனி மின்வலு நிலையம் போன்ற முக்கிய இடங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கப்போவதாக புலனாய்வுப் பிரிவினர் பாதுகாப்புப் படையினரை எச்சரித்துள்ளனர்.

புலனாய்வுப் பகுதியின் இவ்வெச்சரிக்கையை அடுத்து மேற்படி நிலையங்கள் பலத்த பாதுகாப்புக்குட் படுத்தப்பட்டுள்ளதுடன் இந்நிலையில் ஆர்ப்பாட்டங்களை கைவிடுமாறும் அரசுகேட்டுக்டுள்ளது. (ம)

# 2006ம் ஆண்டிற்குப் பின்னரே பொதுத் தேர்தல் நடத்தப்படும்!

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

2006ம் ஆண்டு வரைஆட்சியையும், ஆணையையும் பொதுமக்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு வழங்கியுள்ளனர். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை குறைவதென்பது மிகச்சிறிய பிரச்சினை இதனைத் தீர்க்கவே நான் நடவடிக்கை எடுத்துவருகிறேன்,

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்களை நேற்று ஜனாதிபதி சந்தித்துப் பேச்சுநடத்தியபோது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறினார்

சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் மத்தியில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது,

எதிரணியினர் எதிர்பார்ப்பது போல் பொதுத் தேர்தல் விரைவில் நடைபெறக் கூடிய சாத்தியம் எதுவுமில்லை 2006ம் ஆண்டுக்குப் பின்பே அடுத்த பொதுத்தேர்தல் நடைபெறும்.

அமைச்சர்கள் மட்டத்திலோ,வேறுமட்டங்களிலோ ஊழல், துஷ் பிரயோகம்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## அரசுக்கெதிரானபேரணியில் அமைச்சர் திஸநாயக்கா கலந்து கொள்வார்?

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியரசுக்கு எதிராகஐக்கியதேசியக்கட்சி உட்படகூட்டு எதிர்க்கட்சிகள் இன்றுநடத்தவுள்ள மாபெரும் ஆர்ப்பாட்டம் மற்றும் அரசஎதிர்ப்பு கூட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சமுர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## வேலணையில் சடலம் கரையொதுங்கியது

(யாழ்ப்பாணம்)

வேலணைத் துறையூர் கடலில் இனந்தெரியாத ஆணின் சடலமொன்று நேற்று கரையொதுங்கியுள்ளது.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## அரசுக்கெதிராக இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் ஜனநாயக விரோதப்போக்குக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பாராளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு கோரியும், ஜனநாயகத்தை பாதுகாக்கும் மக்கள்கூட்டமைப்பு,இன்று கொழும்பில் மாபெரும் ஆர்பாட்டப் பேரணியொன்றையும் எதிர்ப்பு கூட்டத்தையும் நடத்த திட்டமிட்டுள்ளது.

மருதானை பொரளைமற்றும்பௌத்தலோகமாவத்தை ஆகிய இடங்களில் இருந்து எதிர்கட்சியினரைச் சார்ந்த ஆயிரக்கணக்கான தொண்டர்களும் பொதுமக்களும்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ஐ. தே. கட்சியின்பேரணியில் வன்முறை வெடிக்கும் அபாயம்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் இன்று கொழும்பில்நடைபெறவுள்ள எதிர்ப்பு ஊர்வலத்தில் பங்கு கொள்ள வேண்டாம் என அரசாங்கம் மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

பொலிஸாரின் அனுமதி பெறாமல் நடத்தப்படும் இவ்வார்ப்பாட்டப் பேரணியின் போது அசம்பாவிதங்கள் ஏற்படலாம் என்ற அச்சத்தினாலேயே ஊர்வலத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என்று அரசு மக்களைக் கேட்டுள்ளது.

இதே வேளைஐக்கியதேசியக் கட்சியின் பேச்சாளர் காமினி அத்துக்கோரளை அரசின் வேண்டுகோள் தொடர்பாக கருத்து வெளியிடுகையில் கூட்டத்திற்கு பொலிஸ் அனுமதி பெற்றுள்ளதாகவும் புறக் கோட்டைப் பொலிசார் இதற்கான அனுமதியைவழங்கியுள்ளதாகவும் ஊர்வலத்தில் மக்கள் கலந்து கொள்வதைத் தடுக்கவே அரசு இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (8ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சைவத்திருமுறைத் திரட்டு' தாயுமானவர் பாடல்கள், ஞானச்கோவைதிருஅருட்பா, பகவற்கீதை, அர்த்தமுள்ள இந்து மதம் நூல்கள் இருக்கின்றன. தொடர்பு 135, சிவன் கோவில் முன்பாக, நல்லூர் யாழ்ப்பாணம். நேரம் மாலை2.00 - 7 00 வரை: (3484)

### (O/L) MATHS

கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 36 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinc-tion பெறுபேறடையக் கற்பிக்கப்படும். தொடர்பு: க. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி; [3486]


# இறுதிவரை தொழிற்சங்க வாதியாக வாழ்ந்தவர் அமரர் நித்தியானந்தா

## முன்னாள் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தன்வாழ்வின் இறுதிவரை சிறந்த தொழிற் சங்க வாதியாக வாழ்ந்து காட்டியவர் அமரர் கே.சி. நித்தியானந்தா.

பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபைஉறுப்பினரும் முன்னாள் கல்விப் பணிப்பாளருமான கோ.சி. வேலாயுதம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் ஆர்.பாக்கியநாதன் தலைமையில், யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள யாழ்.பல.நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அமரர் கே.சி. நித்தியானந்தா நினைவு வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது;

அன்னாரோடு பழகிய வன் என்ற வகையில் அவரைப் பற்றி கூறஆவல் கொண்டுள்ளேன். நித்திஅண்ணன் மிகவும் பெருமை வாய்ந்தவர். சிறந்தஆளுமைகொண்டவர். பழந்தமிழில் பாட்டிசைத்த பாரதிதாசன் தனது பாடலில் 'மக்கள் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்' என்றான். இந்தமண்ணிலே வாழுகின்ற மக்கள் வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும். இந்த மனப்பான்மை அண்ணன் நித்தியிடம் காணப்பட்டது. இவை நான் கேட்டு அறிந்தவை அல்ல,பழகி அறிந்து கொண்டவை;

21ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள்முன்காட்சி தந்த நித்தி அண்ணன் எவ்வாறு செயற்பாடுகளை நகர்த்திசென்றாரோ அவ்வழியில் நாம் நிற்றல் வேண்டும் அதுதான் எம்மண்ணிற்கு விடிவு தரும்.

இவ்வைபவத்தின் ஆரம்பத்தில் அமரர் கே.சி நித்தியானந்தாவின் உருவப்படம் திரை நீக்கம் செய்யப்பட்டது.

யாழ்.அரசஅதிபர்கே: சண்முகநாதன் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.தவராசா, மனித கௌரவத்திற்கான அமைப்பின் தலைவர்திருமதி மகேஸ்வரி-வேலாயுதம் பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்க உத்தியோகத்தர் ஜி. தங்கவேல் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (க-06)

## படக்காட்சி

யாழ் மாவட்ட சுகாதார திணைக்களத்தின் நடமாடும் சுகாதாரக்கல்வி பிரச்சாரப் பிரிவினரால் குடும்பநலம் சுகாதாரம் தொடர்பான படக்காட்சிகள் அராலி, நவாலி சண்டிலிப்பாய் பகுதிகளில் காண்பிக்கப்பட்டன; (வ)

## சங்கத் தலைவர் வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

சண்டிலிப்பாய்பிரதேச செயலகத்திற்குட்பட்ட அனைத்துக் கைப்பணியாளர்களையும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள செயற் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு அப்பிரதேச செயலக ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய கைத்தொழில் அபிவிருத்திச்சங்கத்தலைவர் சகல பணியாளர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்;

மேற்படி சங்கவளர்ச்சி மற்றும் முன்னேற்றம் கருதி நவம்பர் மாதம் 03 ,ஆம் 04 ஆம் திகதிகளில் பிரதேசசெயலகத்தில் மாபெரும் கண்காட்சி இடம் பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேசசெயலகத்தின்கீழ்''ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய கைத்தொழில் அபிவிருத்திச்சங்கம்'' அப்பகுதி பிரதேச செயலர் என்.வேதநாயகனால்இம் மாதம் 08 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டமைஏற்கனவே தெரிந்ததே. [க-07]

## ஆதரவாளர் கூட்டம்

(ஏழாலை)

இன்றைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் ஆதரவாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று மு.ப 10-00 மணிக்கு அளவெட்டி நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-12)

## மடுக்கரையில் புதிய குடியேற்றத் திட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் நானாட்டான் மடுக்கரையில் புதிய குடியேற்ற திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களில் தொடர்ச்சியாக வசித்து வரும் மக்களை, அரச காணிகளை இனங்கண்டு, அவர்களை மீளக் குடியமர்த்த வேண்டுமென்ற ஜனாதிபதியின் பணிப்பிற்கிணங்கவும் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரின் ஆலோசனைக்கிணங்கவும் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ், வவுனியா நலன்புரி நிலையங்களில் வாழும் மன்னார் மாவட்டத்தினை வதிவிடமாகக் கொண்ட 240 குடும்பங்கள் இனம் காணப்பட்டு, அவர்களில் 100 குடும்பங்கள் மடுக்கரை விசேட மீள் குடியேற்றத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு அண்மையில் முதற்கட்டமாக 25 குடும்பங்கள் குடியேற்றம் செய்யப்பட்டன.

இவ்வருட ஒக்டோபர் மாதத்தில் இத்திட்டத்தின் முழு இலக்கும் அடையப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத் திட்டத்திற்கென வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வடக்கு-கிழக்கு மீள் குடியேற்ற புனர்வாழ்வு அதிக ரசபை மூலம் 12, 911, 803 ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது. (உ)

## 2 வாரங்களுக்குள் பால்மாவிலைகள் குறையும்

(கொழும்பு)

'பால் மா' வகைகளுக்கான விலைகள் குறைக்கப்படும் என உணவு சந்தைப்படுத்தல் அமைச்சு தெரிவித்துள்ளது.

பால் மா வகைகளுக்கான வரிகள் உடனடியாக ரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதையடுத்தே விலை குறைக்கப்படவுள்ளதாகவும்,

விலைகள் 10 ரூபா முதல் 13 ரூபா வரை குறையும் எனவும் மேற்படி அமைச்சைச் சேர்ந்த உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார் (செ)

## வாராந்த நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மு ப. 10.30 மணிக்கு வட்டு: யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் பொ. அருந்தவநாதனின் அறிமுகவுரையைத் தொடர்ந்து ''திருமந்திரம்'' என்னும் தலைப்பில் வட்டு: யாழ்ப்பாணக்கல்லூரி விரிவுரையாளர் அ. குமாரவேல் சொற் பொழிவாற்றவுள்ளார். (செ)

## கடற்றொழில் வளவியல் கருத்தரங்கு தீவகத்தில்

(ஈச்சமோட்டை)

மனித முன்னேற்ற நடுநிலையத்தின் தீவக உயிர்ப்பூட்டல் குழுநடத்தும் தீவக கடற்றொழில் சங்க நிர்வாகிகளுக்கான கடற்றொழில் வளவியல் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00மணிக்கு எழுவைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது;

இக்கருத்தரங்கில் கடற்றொழில் வளங்களும் அபிவிருத்திக்கான வழிகளும் என்னும் தலைப்பில் யாழ் மாவட்ட கடல் வளப் பரிசோதகர் எம். பீ அன்றூ விளக்கமளிப்பார்.

மேலும் களப்பயிற்சி, குழு நிலை விவாதம் கருத்துக்களம் முதலியனவும் இடம் பெறவுள்ளன. (உ-59)




உ

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில்

### வருடாந்த மஹோற்சவம்

24-08-2001 வெள்ளி (நாளை) கொடி ஏற்றம் பகல் 12.30 மணி 01-09-2001 சனி தேர்த்திருவிழா, பிற்பகல் 2 மணி 02-09-2001 ஞாயிறு தீர்த்தத் திருவிழா பிற்பகல் 2 மணி தினசரி மாலை 5 மணியளவில்

பிரசங்க பூஷணம்

நு. சிவசண்முகமூர்த்தி அவர்கள்

பிள்ளையார் பெருமை பற்றிப் பிரசங்கம் செய்வார்கள்

விழாக் காலங்களில் விசேட நாதஸ்வர இசை, பஜனை என்பனவும் இடம் பெறும். அடியார்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

உபயகாரர்கள்

கருணாகரப் பிள்ளையார் கோயில், உரும்பிராய்; [3488]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

நுண்கலைமாணி (இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்) இசைக்கலைமணி/ நாட்டியக்கலைமணி பரீட்சைகள்

மேற்படி கற்கை நெறிகளின் முதலாம், இரண்டாம் வருடப் பரீட்சைகளுக்கான கால அட்டவணையைஇசைத்துறை, நடனத்துறை, கலைப் பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகைகளில் பார்வையிடலாம்.

முதலாம் வருடப் பரீட்சைகள் 03-09-2001ல்இருந்து ஆரம்பமாகும்.

பதிவாளர்

[C/2415]

### பாராட்டி நன்றி கூறுகின்றோம்



வடமராட்சி, துன்னாலை புளியங்கியான் பிள்ளையார் ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்காக நிதியுதவி வழங்கிய

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு வடக்கு-கிழக்கு தமிழ் மொழி அமுலாக்கல் இந்து கலாசார

மாண்பு மிகு அமைச்சர்

K. N. டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கும்

யாழ்: மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. யின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளருமாகிய

கௌரவ

கே. வி. குகேந்திரன் (ஜெகன்)

அவர்களுக்கும்

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளருமாகிய

உயர்திரு

ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் (J. P. U. M)

(ரங்கன்)

அவர்களுக்கும்

பருத்தித்துறை பிரதேச சபை

உபதலைவர்

உயர்திரு. ப. ரவீந்திரன் (ராசீக்)

அவர்களுக்கும்

எமது ஆலய வளர்ச்சியில் அக்கறை கொண்டு நிதி வழங்கியமைக்காக பாராட்டி வாழ்த்துக் கூறி எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை

துன்னாலை கிழக்கு, துன்னாலை;

[C/2416]

# முன்நோக்கிய பாதையில் மக்களை வழிநடத்த ஈ.பி.டி.பி முயன்று வருகின்றது - அமைச்சர் டக்ளஸ்



வாடிய பயிரைக் கண்டு வாடினேன். இது இராமலிங்க அடிகளார் அருளிய ஒரு வாசகம். வாடிக் கொண்டிருக்கும் பயிரைக் கண்டு வாடும் அளவுக்கு பரந்த மனப்பாங்கு பெற்றிருப்பது சிறப்பானது தான். ஆனால், வாடுகின்ற பயிரைக் கண்டு நாமும் வாடிக் கொண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை. மாறாக வாடுகின்ற பயிருக்கு நீர் பாய்ச்சி, உரமிட்டு செழிப்பாக வளர வழிவகுக்க வேண்டும். அது தான் பொருத்தமானது. இவ்வாறு தான் ஈ பி டி பியினராகிய நாங்கள் சிந்திக்கின்றோம். செயல்படுகின்றோம். மக்களுக்கு இருக்கின்ற துன்பங்களையும், துயரங்களையும்சுட்டிக்காட்டி அனுதாபம் தேடிக் கொள்வதைவிடவும், இத்துன்ப துயரங்களை நீக்குவதற்கான வழிவகைகளை நாடிச் செயற்படுகின்றோம். முன் நோக்கிய பாதையில் மக்களை வழிநடத்திச் செல்ல முனைகின்றோம்.

இவ்வாறு அமைச்சர் கே. என். டகளஸ் தேவானந்தா தெரிவித்தார். நேற்று முன்தினம் கரவெட்டி, மற்றும் வட்டுக்கோட்டை பிரதேசங்களைச் சேர்ந்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளான சுமார் நானூறுக்கும் அதிகமான பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

போராட்டம் என்பது தவறானது அல்ல. ஆனால் இருப்பவற்றைப் பாதுகாப்பதும், பெற வேண்டியதைப் பெறுவதுமே போராட்டத்தின் இலக்காக இருக்க வேண்டும். எனினும் இருப்பவற்றை அழிப்பதாகவும், பெறக்கூடியவற்றைப் பெறவிடாமல் தடுப்பதாகவுமே போராட்டம் தொடர்கின்றது. இந்தப் போக்கு உங்களுக்கு உடன்பாடானதா என்று கேள்வி எழுப்பிய, அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்; தற்போதைய பாராளுமன்றத்தில் தமிழர் விடுதலைககூட்டணிக்கும் ஐந்துஆசனங்கள் உண்டு. எமக்கும் ஐந்து ஆசனங்கள் தான் உண்டு. எனினும் அவர்களது அலுவலகங்களை நோக்கிச் செல்பவர்களைவிடவும் எமது அலுவலகங்களை நாடி வருபவர்களே அதிகம். வீராப்பான அரசியல் பேசிப் பத்தோடு பதினொன்றாக நாங்களும் இருக்க வேண்டுமா? அலலது எமது பாதையில் தொடர்ந்தும் முன்னேற வேண்டுமா? எனவும் வினா எழுப்பினார்.

ஈ. பி. டி. பி. யினராகிய நாங்கள் மக்களைக் கடலுக்குள் தள்ளிவிடப்போவதில்லை மலையுடன் மோதவிடப்போவதில்லை. பாதாளத்தில் வீழ்த்திவிடப் போவதில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் மற்றும் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## லொறி விபத்து

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையில் மூத்தவிநாயகர் கோவில்பகுதியில் சங்கரப்பிள்ளை வீதியில் மின்கம்பம்ஒன்றை அடித்துவீழ்த்திவிட்டு லொறி ஒன்று மாயமாக சென்றுவிட்டது.

இச்சம்பவத்தால் இலங்கை மின்சார சபைக்கு கணிமான நட்டம் ஏற்பட்டதாக அறியப்படுகிறது. (க)

## பயிற்சி வகுப்பும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

அவரை இனப் பயிர்ச் செய்கை தொடர்பான பயிற்சி வகுப்பும் கலந்துரையாடலும் இம் மாதம் 28ஆம் திகதிமுற்பகல் 10 00மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம் பெறவுள்ளதாகமாவட்டவிவசாய உதவிப் பணிப்பாளர் எஸ். சின்னத்துரை தெரிவித்துள்ளார்.

பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் தங்கள் பிரிவில் உள்ள விவசாய போதனாசிரியருடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-06)

### தேசிய நல்லிணக்க அரசமைப்பு

# பிரதமர் ரட்ணசிறியின் அழைப்புக்கு டிரோன் பெர்னாண்டோ வரவேற்பு

(கொழும்பு)

தேசிய நல்லிணக அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த வருமாறு உத்தியோகபூர்வ அழைப்பொன்றை, பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விடுத்திருப்பதை அக்கட்சியின் அமைப்பாளரும் எம். பியுமான டிரோன் பெர்னாண்டோ பாராட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை பிரதமரால் அனுப்பி வைக்கப்பட்ட மேறபடி கடிதம் தொடர்பாக டிரோன் பெர்னாண்டோ தெரிவிக்கையில்;

பிரதமரின்அழைப்புபயனுள்ளதும் முன்னேற்றகரமானதுமாகும்.

இதற்குச் சாதகமான பதில் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்றார்.

தவிர, அஸ்கிரிய பீடபீடாதிபதி, கத்தோலிக்க ஆயர் சம்மேளன அமைப்பினர் ஆகியோரும் பிரதமரின் அழைப்பை வரவேற்றுள்ளனர். [உ]

## மரங்கள் வளர்ப்பு ஊக்குவிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக்குடாநாட்டில் மரங்கள் வளர்ப்பதை ஊக்குவிக்க வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தவகையில் நிழல்தரும் மரங்கள், பழம்தரு மரங்கள், விறகுக்கான மரங்கள் என்ற வகையில் பல்வேறு விதமான மரக்கன்றுகளையும் நட்டு வளர்க்கவும் பனை, தென்னை. மா, பலா, வேம்பு, மலைவேம்பு, தேக்கு, சவுக்கு போன்ற மரக்கன்றுகளை நடவும் பேணி வளர்க்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டில் விறகுத் தட்டுப்பாடு, உட்பட, போதிய மரங்கள் இன்மையால் பல்வேறு பிரச்சினைகள் எதிர் நோக்கப்படுவது தெரிந்ததே. (உ)

## இளைஞருக்கு மரணதண்டனை

[மட்டக்களப்பு]

தமிழ் இளைஞர் ஒருவருக்கு விடுதலைப் புலிகள மரண தண்டனை விதித்த சம்பவம் மட்டக்களப்பு சித்தாண்டிப் பகுதியில் அண்மையில் இடம் பெற்றுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

வேலாயுதன் நாகேஸ்வரன் (வயது-26) என்பவருக்கே விடுதலைப்புலிகள் மரண தண்டனை வழங்கியுள்ளனராம்.

படையினருக்கு உதவிசெய்தமைக்காக இவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டதாக கழுத்தில் எழுதப்பட்டிருந்ததாம்.

வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் மேற்படி இளைஞனின் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மத்திய கிழக்கில் பணிபுரியும் ஊழியர்களின் சம்பள பிரச்சினைக்கு தீர்வு

(கொழும்பு)

மத்தியகிழக்கு நாடுகளில் பணிபுரியும ஊழியர்களின் சமபளப் பிரச்சினையைத் தீர்க்க புதிய திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

முதற்கட்டமாக சவுதி அரேபியாவில் பணிபுரிபவர்களில், குறிப்பாக அங்கு பணிப்பெண்களாக தொழில் புரிபவர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாய் வெளிநாட்டு வேலை வாய்ப்புச்சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம், அங்கு கடமை புரியும் ஊழியர் ஒவ்வொருவரினது பெயருக்கும் வங்கிக்கணக்கு திறக்கப்படவுள்ளது.

இதன் மூலம் சம்பளம் வழங்கப்படாமை கண்டு பிடிக்கப்பட்டு உரியவர் மீது சட்டநடவடிக்கை எடுக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## நல்லின விதைகள் விரைவில் விநியோகம்

### பீடாதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு விவசாயிகளின் 2001ம் ஆண்டு காலபோக உற்பத்திக்கு தேவையானநல்லினவிதைகள் கோண்டாவில் இருபாலை வீதியில் புதிதாக அமைந்துள்ள யாழ்குடாநாட்டு நல்லின விதை உற்பத்திக் கூட்டுறவு சங்கம் விநியோகிக்கவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி எஸ். இராசதுரை அறிவித்துள்ளார்,

தென்பகுதியில் இருந்து யாழ், குடாநாட்டு மக்களுக்கு இது வரை காலப்பகுதுகளிலும் கிடைத்துவந்த விதையினங்கள் தரம் அற்றவையாக காணப்பட்டதை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும் கமநலகேந்திர நிலையங்கள் ஊடாகவும் விநியோகம் இடம்பெறவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-06

### சென்ரல் காம்ப்

## தாக்குதல் குறித்து புலிகள் அறிக்கை

(கொழும்பு)

''கோணேஸ்வரி பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டமையை நினைவு கூர்ந்தே அம்பாறை மாவட்ட மத்திய பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தினோம்''

இவ்வாறு விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

நான்கு வருடங்களுக்குமுன்னர் இப் பொலிஸ் நிலையத்தில் மேற்படி பெண் பலாத்காரமாக பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ)

## தலைமைத்துவ பாசறை

(ஈச்சமோட்டை)

மனித முன்னேற்ற நடு நிலையத்தின தீவக உயிர்ப்பூட்டல் குழுவினர் நடாத்தும் இளையோர் தலைமைத்துவப் பாசறை இன்று காலை 9.00 மணிக்கு எழுவைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தலைமைத்துவ பண்புகளும் ஆளுமை வளர்ச்சியும் பற்றிய விளக்க உரையை மனித முன்னேற்ற உயிர்ப்பூட்டல் இணைப்பாளர் எஸ். ஜோசப்பாலா நிகழ்த்துவார்.

மேலும் குழுநிலை ஆய்வு, களப்பயிற்சி, விவாத அரங்கு மற்றும் அரங்க செயற்பாடுகள் என்பனவும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் சிறப்பு நிகழ்வாக 'அலை ஓசை' எனும் பத்திரிகை வெளியீடும், புதிய உதயம் நாடகப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற 'உதயத்தை தேடி' நாடகமும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-59)

## சிறுமி செய்த சிறுபிழையால் மூர்க்கரான ஆசிரியர்

### மாநகர பிரதிமேயர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிய குற்ற மிழைத்த மாணவியைஇரவு 8 00 மணி வரை அறையினுள் பூட்டி வைத்து அதிபரும், ஆசிரியர்கள் மூவரும்சேர்ந்து மாறி மாறி அடித்த கொடூரசம்பவம் மலையகப் பகுதிபாடசாலை ஒன்றில்இடம்பெற்றுள்ளதாக நூரளை மாநகர பிரதிமேயர் கூட்டமொன்றில் உரையாற்றுகையில்விபரித்துக் கூறினார்

அவர் மேலும் பேசுகையில் பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர்களின் இவ்வரறான அத்து மீறல்கள் ஒழுக்க சீர்கேடுகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

மாணவர்கள் செய்யும்தவறுகளை நயத்தாலும், பயத்தாலும், திருத்த வேண்டிய ஆசிரியர்களே இவ்வாறான கண்மூடித்தனமான செயல்களை செய்வது குறித்து மாகாண கல்வி அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார் (செ)

## உறவினரிடையே கைகலப்பு இருவர் ஆஸ்பத்திரியில்

(மந்திகை)

தும்பளை இலட்சுமணத் தோட்டம் இடம்பெயர்ந்தோர் முகாமில் உறவினர்களிடையே ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்த நிலையில் இருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாகர் கோவிலில் இருந்து இடம்பெயர்ந்து மேற்படி முகாமில் வசித்து வரும் எஸ். திருச்செல்வம் (வயது 85), நாகநாதன் கிருகதாசன் (வயது 15) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ-23)

## டிப்ளோமா வகுப்புக்கள் 26 இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்று வந்த தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா முதலாம்வருட ஆசிரிய மாணவர்களுக்கான செயலமர்வு வகுப்புக்கள் இம் மாதம் 26 ம் திகதிஞாயிற்றுக் கிழமை வழமையான நேரஅட்டவணையில் நடைபெறவுள்ளதாக சிரேஷ்டவிரிவுரையாளர் தி.வில்வநாதன் தெரிவித்துள்ளார்.

முன்னர் நடைபெற்றுவந்த இவ்வகுப்புக்கள் தவிர்க்கமுடியாத காரணமாகஇடைநிறுத்தப்பட்டிருந்ததும் இங்குறிப்பிடத்தக்கது. (க-06)

**மறைந்தார் மாண்பு:**

# அராலியூர்ப் பௌராணிகராகிய அந்தணர் பரமேஸ்வர சர்மா

அறிஞர்கள் இருவகையினர், மேடைகளில் சபைகளில்தோன்றி சிலர்பிரபல்யமாகின்றனர், மற்றோர் தங்களை இனங்காட்டாமல் இலைமறை காய்போலுள்ளனர். அப்படியானவர் அராலியூர் சிவசாமிஐயர் பரமேஸ்வர சர்மா. அமைதி, அறிவு, பண்பு மிளிர்ந்த கவிஞர், எழுத்தாளர், பௌராணிகர் சிறந்த அந்தணர். ''பரணி'' என்ற புனைபெயரில் பல ஆக்கங்களைப் படைத்தவர். அராலி சிவசாமிக் குருக்களின் மகனான இவர் துணவி வைரவப் பெருமானுக்கும் அர்ச்சகராய் பணியாற்றினார். இசையோடிணைந்த அமைதியான இனிமையான மந்திர சுலோக பூசை அனைவரையும் கவர்ந்தது: அவருடைய கவிதை கட்டுரை நல்லைக் குமரன் மலரிலும் ஏனைய பத்திரிகைகளிலும் பலதடவைகள் வெளிவந்தன. நல்லூர் கந்தசாமியார் ஆலய புராண படனத்தின் போது அவர் டன. அண்மையில் துணவி வைரவர் கும்பாபிஷேக நிகழ்வில் அவருடைய மகன் மருதடி விநாயகராலய பிரதம குரு ஜெய குமாரக் குருக்களின் கௌரவ நிகழ்வைக் கண்டு மகிழ்வுற்றார். அண்மையில் அராலி அம்பாள் ஆலய உற்சவ நிகழ்வில் தங்கள் ஊரார்களைக் கண்டு அன்போடு உரையாடி மகிழ்ந்தார். தம் 74 வது வயதில் இறைநீழலடைந்தார். அன்பு, அறிவு, அடக்கம், அவாவின்மை எனும் பண்புகள் மிளிர வாழ்ந்த அந்தணர். அவர் ஆன்மா இறை நீழலில் இன்புற்றிருப்பதாக.

**சங்கரத்தையூர் சபாநாதன்**

திறமைமிளிரும்:

**தங்கப் பதக்கம் பெற்றவர்**

பல கட்டுரை கவிதைப் போட்டிகளில்பரிசுகள் பெற்றவர்; அண்மையில் தந்தை செல்வா ஞாபகார்த்தமாக அகிலஇலங்கை ரீதியாக நடைபெற்ற போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றவர். அவர் திறமையை யாழ்ப்பாணத்திலுள்ள அந்தண அமைப்புக்கள் இனம் காணத் தவறிவிட்

# மாடு கடத்திய மூவருக்கு விளக்க மறியல் உத்தரவு

(மந்திகை)

கச்சாய் பகுதியிலிருந்து பசு மாட்டைக் கடத்தி வந்த மூவர், கொடிகாமம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேகப் பேர் வழிகளை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி அன்னலிங்கம் பிறேம் சங்கர் உத்தரவிட்டார்.

அதேவேளை, சம்பந்தப்பட்ட மாடு பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டு கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கட்டி வைக்கப்பட்டுள்ளதாகவும் உரியவர்கள் பொலிஸ் நிலையத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு கொடிகாமம் பொலிஸார் அறிவித்துள்ளனர். (உ-23)

**பெரும் எடுப்பில்**

# விமானத் தாக்குதல் மீண்டும் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

அம்பாறையில் பொலிஸ் நிலைய முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டமையை அடுத்து. சில மணிநேரத்தின் பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்கள் சில, விமானப்படையினரின் குண்டு வீச்சுக்கு இலக்காகியுள்ளன.

இஸ்ரேல் தயாரிப்பான கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் அண்மையில் யாழ்.குடாநாட்டின் பளைபிரதேசத்தை அண்டிய பகுதிகளில் குண்டு வீச்சுக்களை நடத்தியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் முதல் குண்டு வீச்சினை நடத்தி வரும் விமானப் படையினர் நேற்று முன்தினம் குண்டு வீச்சிற்கு நான்கு ஜெட் விமானங்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-4)

# சிறையில் இருந்து தப்பிய பாதாள உலகப் பேர்வழி மாத்தளையில் கைது

(கொழும்பு

வெலிக்கடைச்சிறைச்சாலையில் இருந்து சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் தப்பியோடிய பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த சுதன் சிறிவர்தன (வயது 32) என்பவரை மாத்தளைப் பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவரிடமிருந்து 5துப்பாக்கி ரவைகள் மற்றும் 2 செலூலர் தொலைபேசிகள் என்பவற்றைக் கைப்பற்றிய பொலிஸார் இவருக்கு உதவியாகச் செயற்பட்டு வந்த இராணுவத்தில் இருந்து தப்பியோடிய ஒருவரையும் கைது செய்துள்ளனர். (உ)

**வேலை இழக்கும் நிலையிலுள்ள**

# ஹோட்டல் ஊழியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கையின் உல்லாசப் பயணத்துறை சீர்குலைந்து போயுள்ளதை அடுத்து 45 ஆயிரம் ஹோட்டல் ஊழியர்கள் தொழிலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள ஒரு இலட்சத்து 13 ஆயிரம் ஹோட்டல் ஊழியர்களில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் 45 ஆயிரம் ஊழியர்களே இவ்வாறு தமது தொழிலை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்தமாதம் 24 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுநாயக்கா விமானத்தளம் மற்றும் விமான நிலையம் மீது தாக்குதல் தொடுத்ததை அடுத்து இங்கு வரும் உல்லாசப் பயணிகளின் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டதனாலேயே இந்நிலை எழுந்துள்ளது.

இதேவேளை, சர்வதேச ஹோட்டல் தினமான இம் மாதம் 27 ஆம் திகதி வேலை இழக்கும் ஆபத்திலுள்ள ஊழியர்கள் ஒன்றிணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றைமேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

# இராசி பலன்

23-8-2001

(ஆவணி 7, வியழக்கிழமை)

பஞ்சமி மு. இ 0 18 வரை

சித்திரை மு. இ 10 50 வரை

ராகுகாலம்-1 35-3. 05

நல்லநேர -7 35-9. 05

**மேடம்**

சுவாரஸ்யம், நண்பர்கள் சந்திப்பு, கௌரவம், காரியம் கைகூடும்.

**இடபம்**

நல்லசம்பவம், ஆரோக்கியம், கலந்துரையாடல், திடீர் பயணம்.

**மிதுனம்**

குடும்ப மனஸ்தாபம், தாழ்வுநிலை, காரியம் நிறைவேறும், வீண்பயம்.

**கடகம்**

மனச்சஞ்சலம், காரியதாமதம், வியாதி, நண்பர்கள் மனஸ்தாபம்.

**சிங்கம்**

மங்களமான சம்பவம், கூட்டுமுயற்சி, காரியநன்மை, வாக்குப்பலிதம்.

**கன்னி**

வாக்கு கலகம், பொருள் விரயம், காரியதாமதம், மரியாதைக்குறைவு.

**துலாம்**

பெரியோர் மதிப்பு, பிரயாசை, கற்பனை மிகுதி, முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**

உணர்ச்சி வசப்படல், காரியதாமதம், எதிர்பாராத உதவி, சயனசுகக்குறைவு.

**தனுசு**

புகழ், தொழில்சிந்தை, காரிய அனுகூலம், நிலைமாற்றம்.

**மகரம்**

தொழில்மேன்மை, பணியாளர் உதவி, முயற்சி கைகூடும், அதிகாரிகள் மனஸ்தாபம்.

**கும்பம்**

வீண்பயம், வயிற்றுக் கோளாறு, புதிய திட்டமிடல், கௌரவம்.

**மீனம்**

வியாதி, வீண்பிரச்சினை, வாகனபயம், காரிய தடங்கல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

-வளவன்

# செய்தித் துளிகள்

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வலயப் பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்று வரும் 12 வயதுக்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட இரண்டாம் சுற்றின் இறுதி நாளான நாளைய தினம் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில்,

பி. ப. 3. 45 மணிக்கு யா/புனிதயோசப் வித்தியாலயம் எதிர் யா/புனித ஜோன்ஸ் கல்லூரி,

பி. ப. 4. 30 மணிக்கு யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் எதிர் யா/ஊரெழு கணேச வித்தியாலயம்,

பி. ப 5. 10 மணிக்கு புதிய சம்பத்திரிசியார் கல்லூரி எதிர் யா/புனித ஜேம்ஸ் கல்லூரி ஆகியன மோதவுள்ளன. [உ-110]

## தொடர்ந்தும் விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக மாணவன் திவ்வியன் கைதினை அடுத்து படையினரால் கைது செய்யப்பட்ட திருநெல்வேலி தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர் மகேந்திரம் சங்கர் இரண்டாவது முறையாகவும் நேற்று முன் தினம் யாழ். நீதிமன்றில் நீதிவான் இ. த. விக்கினராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

சட்டமா அதிபரின் பணிப்புரை கிடைக்கும் வரை இரண்டு வாரம் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (உ-6)

## மட்டு இளஞரைக் காணோம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நாவற்காட்டைச் சேர்ந்தஇளைஞர் ஒருவரை காணவில்லை என உறவினர்களால் மட்டக்களப்புமனிதஉரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரிசிஆலை ஒன்றில்வேலை செய்யும் மதிவதனன் எனும் இளைஞனையேகடந்த14ஆம் திகதி முதல் காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுளளது.

இவர் அன்றைய தினம் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசமான மட்டக்களப்பு நகருக்கு சென்றிருந்தார் என்று தெரியவருகிறது. (உ-4)

## தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும்

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தின் அறிக்கைகள் கிடைத்ததும், 1999 ஆம் ஆண்டுக்கு முன்னர் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு தண்டனை நிறைவேற்றப்படும் என நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ)

## சரக்கு விமான சேவை ஆரம்பம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானத்தள தாக்குதலின் பின்னர் மீண்டும் இலங்கைக்கான சரக்கு விமான சேவையை ஸ்ரேல் இ. ரி. ஏ-1 எயர் லைன் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

நாளாந்தம் சரக்கு விமான சேவையிலீடுபடும்போயிங்-67 என்ற விமானம் 40 தொன் எடையுள்ள பொருட்களை எடுத்துச் செல்லக்கூடியது. (உ-5)

## உதைபந்தாட்டம் மீண்டும் இன்று

[சுண்டுக்குளி]

யாழ் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான தலைவர் வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி மீண்டும் இன்று பி. ப 5.00 மணிக்கு துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறும் என லீக்கின் உப தலைவர் கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மேற்படி போட்டி இடம்பெற்ற போதும் இடையில் இடைநிறுத்தப்பட்டமை தெரிந்ததே. [உ-110]

## கலாசார உத்தியோகத்தர் கலந்துரையாடல்

[கொழும்பு]

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் அனைவரையும் நாளை பி. ப 3:00 மணிக்கு யாழ். கச்சேரியில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறைச் செயலாளர் பரமேஸ்வரன் கேட்டுள்ளார். (உ-5)

## முன்பள்ளிக்கு புதிய கட்டடம்

(புலோலி)

கெருடாவில் அம்பிகை சிக்கன கடனுதவு கூட்டுவுச்சங்க சனசமூக நிலைய முன்பள்ளிக்கு சுமார் 5இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சனசமூக நிலையத் தலைவர் ஆர். குணசேகரம் தெரிவித்தார் இந்நிலையத்திற்கென கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது (உ-52)

## அடிக்கல் நாட்டல்

(மந்திகை)

துன்னாலை வடக்கு வல்லியானந்தம் சனசமூகநிலையத்திற்கு புதியகட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவர் ஐ ஸ்ரீரங்கேஸ்வரன்அடிக்கல்லினைநாட்டி வைப்பார். (உ-23)

## அரசியல் பரப்புரை

(மந்திகை)

கூட்டணி ஆதரவாளர்களுடனான '' இன்றைய அரசியல் சூழ்நிலை '' என்ற தலைப்பிலான கருத்தரங்கு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப 10:00 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்ரான்லி வீதியிலுள்ள அலுவலகத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர முதல்வர் ந. ரவிராஜ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, ஆனந்தசங்கரி, சிவமகாராசா ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (உ-23)

## இன்று ஒரு தகவல்

# வல்லவனுக்கு வல்லவன் என்றும் இருப்பான்

ஒவ்வொரு மனிதரும் ஏதோவொரு வகையில் நாம் வல்லவர்கள் என எண்ணுவதுண்டு ஆனால் வெளிக்காட்டிக் கொள்வதில்லை. அவர்களின் செயலே அதை உணர்த்தும். குடும்பம் என்னும் வண்டியைச் சீராகச் செலுத்துவது தான் என மனைவியும், தான் எனக் கணவனும் எண்ணுவதுண்டு. இது சிலவிடயங்களில் பொருந்தியும், பொருந்தாமலும் இருக்கலாம். இருந்திருக்கலாம. ஆனால் இவ்வண்டி சீராகச் செல்ல இருவருடைய வல்லமையும் தேவை என்பதே முடிவு.

குடும்பத்தில் மட்டுமல்ல சமுதாயத்திலும் கூட சில நேரங்களில், சிலவிடயங்களில் வல்லவர்கள் யார் என்பதை இனங்கண்டு கொள்வதில் ஏற்படும் சிக்கல்களில் முரண்பாடு எழுவதுண்டு. இச்சந்தர்ப்பங்களில் கல்வியில் மேம்பட்டவர்களைவிட பணபலமுடையவர்களுடைய கருத்துக்களையே சமுதாயம் அங்கீகரிக்கும். ஏனெனில் இவர்களுடைய நட்பே உடனடித் தேவைகளுக்குதவும், கல்வி கற்றவர்களின் உதவி வாய்ப்பைப் பெறுவதற்கு நீண்ட நாட்கள் எடுக்கும். எனவே இருவருடைய பங்களிப்பும் சமுதாயத்துக்குத்தேவை என்பதே எதிர்பார்ப்பு. இங்கே வல்லமை காரணமாக ஒருவனை ஒருவன் ஏமாற்றவோ ஒருவனுக்கு ஒருவன் தீங்கு செய்யவோ முயன்றான அவனுக்கு ஆண்டவனுடைய தண்டனை நிச்சயம். இத்தண்டனை நேரடியாகவன்றி மனித வடிவில் அச்செயலில் ஈடுபட்டவனுக்கு உணர்த்தும் என்பது தொகுத்தறிவு மூலம் கண்ட உண்மையாகும் என்பதை உணர்த்த ஒரு கதை

பல சொத்துக்களுக்கு அதிபதியான முதலாளி ஒருவன் பல தொழிலாளர்களை வேலைக் கமர்த்தியிருந்தான். சாதுரியமாகத் தொழிலாளர்களிடம் எப்படியெல்லாம் வேலைவாங்க முடியுமோ அந்தளவுக்கு வேலை வாங்கிக் கொள்வான். எனினும் இவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதுஎன்பது அவனுக்கு விருப்பமில்லை; தொழிலாளர்கள் வேலை முடிந்து வீடு திரும்பும் வேளையில் தான் சொல்லும் மேலதிகமான வேலையைச் செய்தாலே சம்பளம் கொடுப்பது அவனது வழமை.

இதை அவதானித்த புதிதாகச் சேர்ந்த முனுசாமி என்ற வேலைக்காரன் முதலாளிக்குத் தக்க பாடம் புகட்ட வேண்டுமென எண்ணினான். சந்தர்ப்ப வசமாக வழமை போன்று வேலை முடிந்தவுடன் முனுசாமியை அழைத்த முதலாளி ஒரு பெரிய மண்பானையையும் சிறிய மண்பானையையும் காட்டி சிறிய பானைக்குள் பெரிய பானையை வைக்குமாறு கூற இன்று சம்பளம் கிடையாது போய்விடுமோ என எண்ணிய முனுசாமி புத்திக் கூர்மையுடன் பெரிய பானையை உடைத்துச் சின்னப் பானையுள் போட்டான். ஏமாந்த முதலாளி வீட்டினுள் உள்ள நெல்லை அள்ளிக் கொட்டாமல் காயவிடுமாறு கூற அவன் வீட்டுக் கூரையை பிடுங்கி விட்டான், அதிர்ச்சியடைந்த முதலாளி பூசனிக்காயொன்றைக் காட்டி அதை ஒரே தடவையில் சமனான பொருள் ஒன்றுடன் நிறுத்தி சமன் செய்யுமாறு கூற சற்று யோசித்த முனுசாமி கத்தியுடன் முதலாளியின் தலையை வெட்டி தராசில் போட்டு பூசனிக்காயை சமன் செய்யப்போவதாக முதலாளியின் அருகே வந்தான்.

அதிர்ச்சியுடன் தன்னை யுணர்ந்த முதலாளி தன் தவறையுணர்ந்து அன்று தொடக்கம் கூலியாட்களின் சம்பளத்தை ஒழுங்காகக் கொடுக்கத் தொடங்கினான். எனவே நாம் பிறரை வருத்தி எக்காரியம் செய்தாலும் வல்லவனுக்கு வல்லவன் ஒரு நாள எமக்கு உணர்த்துவான் என்பதையுணர்ந்து வாழக்கற்போம். □

மு. விக்னேஸ்வரன்
கோப்பாய்

# இராணுவ ஆயுதக் கொள்வனவில் ஊழல்
# செய்தியை வெளியிட்ட பத்திரிகை குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும்
## இராணுவத் தளபதி பலகல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவ ஆயுதங்கள் கொள்வனவில் ஊழல் இடம் பெற்றதாகவும் அதில தன்னை சம்பந்தப்படுத்தியும் கட்டுரை வெளியிட்ட ஆங்கில வாரப் பத்திரிகை அக்குற்றச்சாட்டுகளை நிரூபிக்கவேண்டும் என்று இராணுவத்தளபதி லெப். ஜெனரல லயனல் பலகல்ல குறிப்பிட்ட பத்திரிகை ஆசிரியரிடம் தெரிவித்துள்ளார். அத்துடன் இப்பத்திரிகை விடுதலைப்புலிகளின் நலன்கருதி ஆயுதங்களைப்பற்றிய பிரசாரம் ஒன்றை நடத்துகிறது என்றும் சாடியுள்ளார்.

ஓகஸ்ட் 12ஆம் திகதி வெளியாகிய 'சண்டே லீடர்' பத்திரிகையில் 'பிரட்றிகா ஜோன்ஸ்' என்பவர் எழுதிய கட்டுரையை குறித்துக்காட்டியுள்ள பலகல்ல, பத்திரிகையின் ஆசிரியருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். "Big stink over Schml Launchers' என்ற கட்டுரை எம்மை மதிப்புக்குறைவாக காண்பிக்கிறது. அத்துடன் பிரிவினைப்போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இன்றைய நிலையில் பாதுகாப்பு படையினர் மத்தியில் மனவுறுதியை குறைப்பதாகவும் இக்கட்டுரை அமைந்துள்ளது. எனவே எனது இந்தக்கடிதத்தை உரிய முக்கியத்துவத்துடன் வெளியிடவும்.

இராணுவப்பேச்சாளர் சனத் கருணாரத்ன, கட்டுரையாளரிடம், மேற்படி இராணுவ ஆயுதம்பற்றிய தகவல்களை அவதானத்துடன் வெளியிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டதையும் புறக்கணித்து கட்டுரை வெளியிடப்பட்டிருக்கிறது மேற்படி ஆயுதம் பற்றிய விபரங்கள் இணையத்தளத்தின் மூலமாக பெறக்கூடியவையே என்னும் துணிவில் இதனை கட்டுரையாளர் வெளியிட்டுள்ளார். ஆனால் இராணுவத் தலைமை இவற்றைக்கொள்வனவு செய்தமை பற்றிய தகவல்கள் ணயத்தளத்தின் மூலம றி மேற்படி கட்டுரையின் மூலமே பொதுமக்களுக்கு கிடைத்துள்ளது.

விடுதலைப்புலிகள் ஓகஸ்ட் 16ஆம் திகதி தமிழ்நெற் இணையதளத்தில் உங்கள் அறிக்கையைமேற்கோள்காட்டியுள்ளனர். அவர்களின்மிகப் பிந்திய பிரசாரத்திற்கான பொருத்தமான பதிலை உரிய காலத்தில் பெற்றுக் கொள்வார்கள்.

ஆனால் அப் பிரசாரத்திற்கு வேண்டிய எண்ணெயை நீங்களே ஊற்றியிருக்கின்றீர்கள். பகைமையும், பொல்லாப்பும் நிறைந்த அந்தக் கட்டுரை மூலமாக எண்ணெய் ஊற்றப் பட்டிருக்கின்றது. இதுதேசத்தின் பாதுகாப்புநலன்களை மட்டுமன்றி பாதுகாப்பு படையினரதும் எமது மக்களினதும் உயிர்களையும் ஆபத்துக்குள்ளாகிவிடுகிறது என்பதை நான்கூற வேண்டுமா? எனவே தங்களிடம் இருக்கக் கூடிய சான்றுகளை பாதுகாப்பு அமைச்சினதும், லஞ்ச ஊழல் ஆணையகத்தினதும் புலன் விசாரணையாளர்களிடம் ஒப்படையுங்கள். இது உங்கள் பத்திரிகையின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும். உங்கள் பத்திரிகையின் பல பக்கங்கள் எதிரியின் இலட்சியங்களை ஆதரிப்பதற்கு பயன்படுவதாக எனது சிரேஷ்ட அதிகாரிகள் என்னிடம் தெரிவித்திருக்கின்றனர். இக்கடிதத்தை முழுமையாக தங்கள் பத்திரிகையில் வெளியிடவும் இவ்வாறு இராணுவத்தளபதியின் கடிதத்தில தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீதிமன்றம் மீது தீ வைக்க விஷமிகள் சிலர் முயற்சி

(கொழும்பு)

இரத்தினபுரி நீதி மன்றத்திற்கு தீ வைக்க மேற்கொண்ட மூன்றாவது முயற்சி காவலாளிகளினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் ஆவண அறைக்குத் தீவைப்பதிலேயே விஷமிகள் நாட்டங்காட்டி வருகின்றனர்.

இந்நீதிமன்றம்மீதுசிலவாரங்களுக்கு முன்னரும், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரும் தீமூட்டியதில கோவைகள் தடயப் பொருட்கள் பல எரிந்து சாம்பலாகியமை குறிப்பிடத்தக்கது. [ச]

# பிள்ளைகளிடையேபிணக்கு பெற்றோர் வரை சென்றது

(மந்திகை)

பிள்ளைகளிடையே ஏற்பட்ட பிணக்கு பெற்றோர் வரை சென்றதில் காயமடைந்த பெண் ஒருவர் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் சற்கோவளம் பகுதியில் இரு தினங்களுக்கு முன் இடம் பெற்றது.

வேலுப்பிள்ளை கண்மணி (வயது-42) என்பவரே காயமடைந்தவராவார். சிறு காயங்களுக்குள்ளான இவரது மகனும் இதே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

## ஒழுங்காக கடமைசெய்ய முடியாது
# கிராம சேவையாளர் திணறல் சிங்களத்தில் சுற்றுநிருபம்

(கொழும்பு)

மலையக பிரதேசங்களில் தமிழ்மொழி மூலம் கடமையாற்றவென நியமிக்கப்பட்ட கிராம சேவையாளர்கள் தமது சேவையை ஒழுங்காக செய்யமுடியாமல் உள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

மலையகமக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானுடன் அண்மையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே கிராம சேவையாளர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அரசாங்கத்திடம் இருந்து வரும் சுற்றறிக்கைகள், கடிதங்கள் தனிச்சிங்களத்தில் வருவதாகவும் இதை உடனடியாக புரிந்துகொள்வதில் தமக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது எனவும்,

இது தொடர்பாக தாம் நுவரெலிய மாவட்ட செயலாளர் ஹெட்டியாராச்சியிடம் பலதடவைகள் முறையிட்டபோதும் சாதகமான பதில் தமக்கு கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (உ-4)

## பன்னிரு திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் ஆலயத்தில் ஒரே தினத்தில் எட்டுத் திக்குகளிலும் இருந்து பன்னிரு திருமுறைகளும் முற்றும் ஓதல் நிகழ்வு அடுத்த மாதம் 1 ஆம் திகதி நடை பெறவுள்ளது. (செ)

## திருத்த வேலைகள் பூர்த்தி

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் திருத்த வேலைக்காக இடமாற்றப்பட்டிருந்த முதலாம், இரண்டாம் விடுதிகள், திருத்த வேலைகள் முடிவுற்றதை அடுத்துமீளவும் பழைய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

கடந்த சிலவாரங்களாக குழந்தைகளுக்கான விடுதி 8ஆம் இலக்க விடுதியிலும் பெண்களுக்கான அவசர சிகிச்சைப் பிரிவு 10 ஆம் இலக்க விடுதியிலும் இயங்கியமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## மெய் வன்மைப் போட்டி

(புலோலி)

தொண்டைமானாறு செருடாவில் அம்பிகை முன்பள்ளியின் மெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் ஆர். குணசேகரம் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொளளவுள்ளார். (உ-52

## சந்நிதிக் கந்தன் ஆலயத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையினரால் தினமும் மு.ப. 10.00 மணிக்கு நடத்தப்படும் தெய்வீக கலை நிகழ்ச்சிகளில் இன்று, "பழனிக் கந்தன்" என்ற தலைப்பில் அருட்கவி சீ வினாசித்தம்பியின் சொற்பொழிவு இடம் பெறும். (செ)

# குழந்தைகளைத் தாக்கும் புதுவிதக் காய்ச்சல் உயிருக்கு ஆபத்து

மாவனல்லை, கேகாலை பிரதேசங்களில் 2 வயதுக்கு குறைந்த குழந்தைகளுக்கு டெங்கு போன்ற புதுவிதக் காய்ச்சல் பரவி வருவதாகவும், இதனால் இதுவரை 4 குழந்தைகள் பலியாகி இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இக் காய்ச்சலுக்கு இலக்காகிமிகவும் கடுமையான நிலையில் பல குழந்தைகள் சிகிச்சை பெற்று வருவதாகவும் குறித்த பகுதி மருத்துவமனைகள் மூலம் அறிய முடிகிறது. (உ)

## தென்மராட்சியில்
# பதிவு செய்யப்பட்ட 100 முன்பள்ளிகள்

(மந்திகை)

தென்மராட்சிப் பகுதியில் இயங்கிய 7 முன்பள்ளி பாடசாலைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சாவகச்சேரி கிழக்கு முன்பள்ளி, மடத்தடி சங்கீதா முன்பள்ளி, சாவகச்சேரிஇராசசங்கரி முன்பள்ளி, புலோப்பளை பிரதாப் முன்பள்ளி மீசாலை வடக்கு பாரதி முன்பள்ளி, தவசிகுளம் மிருசுவில் முன்பள்ளி, கச்சாய் வீதி குழந்தையேசு முன்பள்ளி ஆகியனவேபதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளின், பதிவுச்சான்றிதழ்கள் தென்மராட்சி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை பெற்றுக் கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்துள்ளார்.

தென்மராட்சி பிரதேசத்தில் இதுவரை 100 முன்பள்ளிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-23]

# சாவ. வர்த்தகர்கள் அமைச்சரிடம் கோரிக்கை

(மந்திகை)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்ற அங்கத்தவர்கள் சேதமடைந்த வர்த்தக நிலையங்களை மீள இயக்குவதற்கு கடன்உதவி செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் மன்றத்தின் செயற்குழு உறுப்பினர்கள் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவை சந்தித்து இக்கோரிக்கையை முன்வைத்தனர்.

இக் கோரிக்கை தொடர்பாக மிகவிரைவில் சாதகமான பதில் தருவதாக அமைச்சர் தெரிவித்தார். (உ-23)

### இந்தியப் பிரதமரின் கிறிஸ்தவ பாதிரிமார்
# பற்றிய விமர்சனத்திற்கு
# ஆ. இ. கிறிஸ்தவ மன்றம் கண்டனம்

(புதுடில்லி)

சமூக சேவைகளில் ஈடுபடும் கிறிஸ்தவ பாதிரிமார்களைப் பற்றி இந்தியப்பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்த கருத்திற்கு கிறிஸ்தவ அமைப் பொன்று பலத்த கண்டனத்தை தெரிவித்துள்ளது.

சமூக சேவைகளில் ஈடுபடு கின்ற சில கிறிஸ்தவ பாதிரிமார் மதமாற்றத்தில் ஈடுபடுவதாக பிரதமர் குற்றம் சாட்டியிருந்தார்.

இக்கருத்திற்கே ஆசிய இந்தியக்கிறிஸ்தவமன்றம்பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஒன்றும் இக்கருத்திற்கு தனது எதிர்ப்பை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. [செ]

### தீக்குச்சி தயாரிக்கும்
# இயந்திரங்களை இறக்குமதி செய்வதைத் தடை செய்க

(புதுடில்லி)

தீக்குச்சி தயாரிக்கும் இயந்திரங்களை இறக்குமதி செய்வதைத் தடை செய்யவேண்டும் என்று ம. தி. மு. க. செயலாளர் வை. கோபாலசாமி மத்திய அரசைக் கேட்டுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்திற்குப் பிறகு இந்தப் பிரச்சினையை வை. கோ எழுப்பினார்.

இந்த இயந்திரங்களின் இறக்குமதி காரணமாக தீக்குச்சி செய்யும் 8 இலட்சத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தமிழகத்தில் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். (து)

### மலேசியாவில்
# ஆரோக்கியமானவர்களே
## வீட்டுப் பணியாளராவதற்கு வாய்ப்பு

(கோலாலம்பூர்)

மலேசியாவில் பணியாற்றும் வீட்டுப் பணியாளர்கள தங்கள் தேக ஆரோக்கியத்தை நன்கு பேணினால் மாத்திரமே அங்கு அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கபபடுகின்றது

மலேசியாவில் வீட்டுப்பணியாற்றுபவர்கள் பெரும்பாலும் பெண்களாகவே காணப்படுகின்றார்கள். இவர்கள் தங்கள் உடல்நலத்தைப் பேணத் தவறும் பொழுது அவர்களின் வேலை உடனே பறிக்கப்படுகின்றது.

சுகாதாரம் தொடர்பாக மலேசிய அரசு கடுமையான சட்டவிதிகளைப் பின்பற்றுவதனால் இங்கு பணியாறறுபவர்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் திகழ்வதாக வெளிநாட்டு நிறுவனம் ஒன்று அறிக்கை வெளியிட்டுள்ளது. (செ)

# தாய்லாந்தில் தொடர்மழை 150 பேர் மரணம்

(தைபி)

தாய்லாந்தில் கடந்த 11 நாட்களாக பெய்துவரும் கடும் மழையினால், 150 பேர் பலியானதோடு 6 ஆயிரத்திற்கும் அதிகமானோர் இடம் பெயர்ந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இப் பெரு மழையினால் 24. 5 மில்லியன் டொலர் பொருளாதாரப் பாதிப்புடன் 2 லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் அழிவுக்குள்ளாகியுள்ளதாகவும் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. [உ-7]

# இந்தோனேசிய அதிபர் பிலிப்பைன்ஸ் விஜயம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய அதிபர் மேகவதி சுகர்னோபுத்ரி நேற்று முன்தினம் தென்கிழக்காசியப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

அதிபர் பதவி ஏற்று முதன் முதலாக பிலிப்பைன்ஸ்நாட்டிற்கு இவர் சென்றுள்ளார்.

இந்தோனேஷிய ஸ்திரத் தன்மையையும் உறுதிப்பாட்டையும் நிலைநிறுத்தும் பொருட்டு இவரின் பயணம அமையும்என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிலிப்பைன்ஸ் நாட்டைத் தொடர்ந்து எல்லா தென் கிழக்காசிய நாடுகளுக்கும் இவரின் பயணம் தொடருமென்று தெரிவிக்கப்படுகிறது. (து)

### மத்திய கிழக்கு நெருக்கடிகளை
# உலகு அறியும் வகையில் யசீர்அரபாத் சீனாபயணம்

(ஜெருசலேம்)

மத்திய கிழக்கு நெருக்கடிகளை உலக நாடுகளுக்கு எடுத்துக் கூறும் வகையில பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் சீனாவுக்கு முதற் கட்டமாகப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

மத்திய கிழக்கில் இடம் பெறும் வன்முறைகளைக் கண்டித்துள்ள சீனா, இஸ்ரேலும் பலஸ்தீனாவும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தமை தெரிந்ததே.

இதே வேளை, மத்திய கிழக்குப் பிரச்சினை குறித்து சமாதானப் பேச்சு நடத்த இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் சீமன் பரஸும் பலஸ்தீன அதிபர் யசீர்அரபாத்தும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இவ்விவகாரம் குறித்து இரு தலைவர்களும், ஜேர்மன் அதிபரை நேற்று முன்தினம் தனித்தனியே சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

# மசடோனியாவில் குண்டு வெடிப்பு
# தேவாலயம் முற்றாகச் சேதம்
### படையினரைக் குறிவைத்தே நடத்தப்பட்டதாம்

(சோபியா)

மசடோனியாவில் டெற்றோவிற்கு அருகில் உள்ள மிகப்பெரிய தேவாலயத்தில் சக்திவாய்ந்த குண்டு வெடிப்பில் தேவாலயம் முற்றாகச் சேதத்திற்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

மேற்படி ஆலயம் தகர்க்கப்பட்டதற்கு அல்பேனியகிளர்ச்சியாளர்களே காரணம் என்ற மசடோனிய அரசின்செய்தியைகிளர்ச்சியாளர்கள்மறுத்துள்ளனர்.

மசடோனியாவின் சமாதான முன் முயற்சியாக கிளர்ச்சியாளர்கள் ஆயுதங்களை கீழே வைப்பதா அல்லது ஆயுதங்களுடன் பேச்சு நடத்துவதா என்று வெளிநாட்டு அதிகாரிகள் ரஸ்பன் நகரில் கூடி முடிவெடுக்கும் வேளையிலேயே இக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

குண்டு வெடிப்பு இடம் பெற்ற ஆலயத்தை சூழ்ந்து அல்பேனிய கிளர்ச்சியாளர்கள் நிலைகொண்டு இருந்ததாகவும் படையினரைக் குறிவைத்தே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு செய்தி ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது

மேலும் சேதமடைந்த ஆலயத்தின் நுழைவாயிலில் நின்ற தூண் ஒன்றையும் பின்புறமாகவுள்ள பீடமொன்றையும் தவிர ஏனைய பெரும் பகுதி தரைமட்டமாகியுள்ளதாகவும் அச் செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது

மசடோனிய அரசிற்கும் அல்பேனிய கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் கடந்த சில மாதங்களாக உள் நாட்டு யுத்தம் நடைபெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-07)

### கள்ளக் குடியேற்றக்காரருக்கு
# பிரம்படித் தண்டனையாம் மலேசிய நீதித்துறை தகவல்

(கோலாலம்பூர்)

கள்ளக் குடியேற்றக்காரர்களுக்குப் பிரம்படி கொடுக்கப் போவதாக மலேசியநீதித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன:

அண்மைக் காலங்களில் சட்டவிரோதமாக மலேசியாவிற்கு புகுந்து இருப்பவர்கள் தொகைஅதிகரித்துவருகிறது.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களால்மலேசியாவில் சமூக விரோதச் செயல்கள் மலிந்துள்ளதாகவும் ஒழுக்கக் கேடுகள் மலிந்துள்ளதாகவும் நோய்கள் பரவுவதாகவும் நீதித்துறையைச் சேர்ந்த அப்துல்லா தெரிவித்தார்.

இற்றை வரை மலேசியாவில் 600 ஆயிரம் சட்டவிரோதக் குடியேற்றக் காரர்கள் இருக்கிறார்களென்றும் சபா மாநிலத்தில் மட்டும்150 ஆயிரம் கள்ளக்குடியேற்றக்காரர்கள் இருக்கிறார்களென்றும் இவர்களெல்லாரும் விசாரிக்கப்பட்டு பிரம்படிக்குள்ளாவார்களென்றும் தெரிவித்தார்: (து)

# உலக தரிசனம்

### கண்ணிவெடியில்
## 9 பொலிஸார் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் தென் கிழக்கு மாநிலமான ஆந்திராவில் பொலிஸார் பயணம் செய்த ஜீப் வண்டியொன்று கண்ணி வெடித் தாக்குதலில் அகப்பட்டதில் ஒன்பது பொலிஸார் ஸ்தலத்திலேயே பலியாகினார்கள். (செ)

### மிகப்
## பெரும் கேக்

(பீஜிங்)

நிலவடிவில், உலகிலே பெரிய கேக்கொன்று சீனாவில் செய்யப்பட்டுள்ளது.

தென் சீனாவின் லான்சி நகரில் செய்யப்பட்ட இந்த கேக்கின் நிறை 3 ஆயிரத்து 934 தொன், குறுக்களவு 484 சென்ரி மீற்றர், உயரம் 18 சென்ரிமீற்றர். (து)

### மக்கள்
## ஆலோசனை மன்றம் நவம்பர் மாதம் கூடும்

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய மக்கள் ஆலோசனைமன்றம்வருகின்ற நவம்பரில் கூடஇருப்பதாக அரசு செய்திக்குறிப் பொன்று தெரிவிக்கிறது:

முன்னாள் அதிபர் அப்துல் ரகுமான் வாஹிட்டின் பதவி நீக்கத்திற்கும் புதிய அதிபர் மேகவதி சுகர்னோ புத்திரி பதவி ஏற்ற பின்னரும் கூட இம் மன்றம் கூடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அதிபர் மேகவதியின் தென் கிழக்காசியப் பயணங்கள் முடிந்தபின் நவெம்பரில் இக் கூட்டத் தொடர் ஆரம்பமாகி சுமார் ஒருவாரத்துக்கு நீடிக்குமென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க- து)

# தேசியவாதிகள் 300 பேர் பொலிஸாரால் கைது
### வன்முறையைதூண்டினராம்

(பட்னா)

இந்தியாவின் கிழக்குமாநிலமான பீஹாரில் ஆளும் ஜனநாயக தேசியவாதிகள் சுமார் 300 பேரை பொலிஸார்கைது செய்துள்ளனர்.

பீஹாரில் அமுலில்இருந்த ஹர்த்தால் வன்முறையாக மாறியதையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 6 ஆம் திகதி இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொலிஸாரால்4 பேர் சுட்டுக் கொலை செய்யப்பட்டதை கண்டித்து நேற்று முன்தினம் அங்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது: (உ-7)

### ஜெயா தலைமையிலான அரசு பதவியேற்று
# நூறு நாட்கள் நிறைவு
## தமிழகமெங்கும் கொண்டாட்டம்

(சென்னை)

ஜெயலலிதா தலைமையில் அ இ அ.தி மு கஅரசு பதவியேற்ற 100 நாட்கள் நிறைவு வைபவம் நேற்று முன்தினம் தமிழகமெங்கும கொண்டாடப்பட்டது.

ஜெயலலிதா தமிழக முதல்வராகப் பதவியேற்றது தொடக்கம்கடந்த 100நாட்களிலும் கலந்து கொண்ட நிகழ்வுகள் சென்னைத் தொலைக்காட்சியில்தொகுத்துக் காண்பிக்கப்பட்டது.

அத்தொகுப்பில் திறப்பு விழாக்களும்கூட்டங்களும்நன்கொடை உதவி நிகழ்வுகளும் முக்கிய இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-து)

# பாகிஸ்தான் தேர்தலில் போட்டியிட்டே தீருவேன்
### முன்னாள் பிரதமர் சூளுரை

(இஸ்லாமபாத்)

அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் பாகிஸ்தான் தேர்தலில் போட்டியிடுவதற்கு யார் தடுத்தாலும் நான் போட்டியிட்டே தீருவேன் என்று முன்னாள் பிரதமர் பெனாஷிர் பூட்டோ சூளுரைத்துள்ளார்.

எனது பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்களையும் என்னையும் அடுத்துவரும் பொதுத் தேர்தலில் போட்டியிடாதவாறு தடுக்கும் முயற்சியில் இப்போதைய அரசு ஈடுபட்டுவருகிறது. இவற்றையெல்லாம் உடைத்துக் கொண்டு நான் போட்டியிடுவேன்என்று அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற கட்சிச்சார்பற்ற உள்ளூராட்சித் தேர்தலில் தமது கட்சியைச் சேர்ந்தவர்கள் கூடுதலாக வெற்றியடைந்துள்ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (து)

# காதலியுடன் உல்லாச
## பயணம் சென்ற வாலிபன் பலி

நீர்த்தேக்கத்தில் காதலியுடன் உல்லாசப் பயணம் செய்த 24 வயது வாலிபர் தோணி கவிழ்ந்ததில் பரிதாபகரமாக பலியானார்.

மேற்படி நபரும் அவரது காதலி உட்பட சகபயணிகளும் பல்லேவரகெம நீர்த்தேக்கத்தில் உல்லாசப் பயணம் மேற் கொண்டிருந்த வேளை, அருகிலிருந்த காட்டில் யானைகள் தென்படவே பீதியடைந்து தோணியை வேகமாக ஓட்ட முற்பட்ட வேளை அது கவிழ்ந்ததினாலேயே இம் மரணம் நிகழ்ந்துள்ளது: (உ)

ஒல்வ(து) அறிவ(து) அறிந்த தன் கண் தங்கிச் செல்வார்க் குச் செல்லாத(து)இல்.
- குறள்

வலம்புரி

## பாலியல் பிறழ்வு-2

தெய்வீக உணர்வோடு சித்திரிக்கப்பட்ட பாலியல் விடயங்கள் இன்றையசினிமாப் படங்களின் அத்துமீறிய விரசங்களாலும், அநாகரிகமான கலாசாரங்களாலும் கட்டவிழ்ந்து விடலைப் பருவங்களைத் தொற்றிவிட்ட பெரும் நோயாக மாறிவிட்டது.

இந்நோயின் தாக்கத்திற்கு, கட்டுக்கோப்புடன் இருந்த யாழ்ப்பாண கலாசாரமும்சோரம்போனது, பாலியல் நோயின் வேகத்தின் காரணமா அல்லது எமது கலாசார காவலரண்களின் பலயீனமா என்பது ஆய்வுக்குரியது.

எதுவாயினும் இப்போது யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் பாலியல் பிரச்சினைகள்அரக்குமாளிகை போல் காட்சி தருகிறது.

வெளிப்பார்வைக்கு ஏதோ நாம் கட்டுக்கோப்பானவர்கள் போல்காட்சி கொடுத்தாலும், உள் நிலை மிக மிக மோசமாகவேயுள்ளது.

இதனை யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலையின் மகப்பேற்று நிபுணர் வைத்தியகலாநிதி பவானி அவர்கள்லண்டன் தமிழோசைக்கு அளித்த விசேட செவ்வியில் இருந்து அறியமுடியும்.

குடும்ப அங்கத்தவர்களாலேயே பாலியல் துஷ்பிரயோகம் அதிகளவில் இடம் பெறுவதாக டாக்டர் பவானி தெரிவித்த விடயத்தை ஒழுக்கத்தில் அக்கறை கொண்ட எந்தச் சமூகமும் மேலோட்டமாக- அக்கறையற்ற கண் கொண்டு பார்க்க முடியாது. ஏனெனில் கடலில் மிதக்கும் பனிக்கட்டி போல், யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் பாலியல் பிறழ்வுகளில் பத்தில் ஒன்றுகூட வெளியில்தெரியாமல் மறைக்கப்பட்டு விடுகிறது. இதனால்பாலியல் பிறழ்வுகள் மேலும் மேலும் பெருகுவதற்கே ஏதுவாகும். இத்தகைய பிறழ்வுகளுக்கு சிறுவர்களும் ஆளாகின்றனர், ஆளாக்கப்படுகின்றனர் என்பது மிக மிக வேதனைக் குரியவிடயமாகும்.

இத் தகைய வேதனை மிகுந்த நிகழ்வுகளைத் தடுப்பதற்கு ஒவ்வொரு பெற்றோரும்தம் பிள்ளைகளின் நடத்தைகள் மீது அதீத அக்கறை காட்ட வேண்டும் அப்போதுதான் பாலியல் துஷ் பிரயோகங்களைத் தடுக்கமுடியும்.

அதே வேளை கட்டிளமைப் பருவத்திலிருக்கும் இளைஞர் யுவதிகளின் நடத்தைகளை ஒழுங்கு படுத்துவதற்கான சமூக ஒழுங்கமைப்புகளும், கருத்தரங்குகளும், ஆலோசனைகளும் ஏற்படுத்தப் படுவதும் அவசியமாகும்.

---

# தெல்லிப்பழையில் திருக்கோயில் கொண்ட
# துர்க்கை அன்னையைத் துதித்து வாழ்வோம்

சமூகஜோதி
**கா. கணேசதாசன்**



அருளொளி தந்துகாக்கும் கண்கண்ட தெய்வம் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா அம்மன் என்றால் மிகையாகாது. இக்கோயில் 150 ஆண்டுகளுக்கு முந்தின வரலாற்றுச் சிறப்புடையது. கோயிலில் முன்பிருந்த மூல விக்கிரகம் யாழ்ப்பாணத்துக் கோப்பாய் என்னும் ஊரைச் சேர்ந்த நாகநாதர் என்பவரால் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வட இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டதென்று கூறப்படுகிறது.

### ஆலயம் அமைந்த வரலாறு

தனது ஊரை அடைவதற்கு முன்பு ஓய்வு எடுப்பதற்காக ஒரு மரத்தடியில் அச்சிலையை வைத்து விட்டுத் தங்கினாரென்றும், பின்னர் அதைத் தூக்கமுடியாமல்இருந்ததால் அங்கேயேஅதனைத் தாபித்து வணங்கினாரென்றும் அந்த இடத்திலேயே இன்றுள்ள கோயில் அமைந்துள்ளது என்றும்ஒரு ஐதீகக் கதை உண்டு.

தெல்லிப்பழை கிராமத்தவரால் பல்லாண்டுகள் போற்றப்பட்ட ஸ்ரீதுர்க்கை அம்மன் சிலை உற்சவ மூர்த்தியாக்கப்பட்டு அழகிய கற்சிலை ஒன்று அருள்புரியும் ஸ்ரீதுர்க்கா தேவியாக ஆதி மூலத்தில் இன்று உள்ளது. கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தீர்த்தக் கேணி, சிறுவர் ஆச்சிரமம், அன்ன தான மண்டபம், ஐந்துதளக் கோபுரம், அழகிய சித்திரத் தேர், மகளிர் இல்லம், அந்தணர் இருப்பிடம், அன்ன பூரணி மண்டபம், நூலகம், அச்சகம், தங்கத்தால் செய்யப்பட்டஉற்சவமூர்த்திஎன்று பல்வேறுகூறுகளைக்கொண்டு எழில் நிறைந்த கலையழகு மிக்க அருட்கோயிலாக இன்று திகழ்கிறது.

### புண்ணிய நாட்கள்

காலத்துக்கு அதிக வலிமை உண்டு. காலத்தில் செய்வதற்கு அதிக பயன்கிட்டும். 'பாலோடாயினும் காலமறிந்து உண்' என்பது பழமொழி. தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கை அம்மன் கொடியேற்றத் திருவிழா தொடங்கி இரதோற்சவம், தீர்த்தத்திருவிழா வரை எமது மக்கள் குறைகள் நீக்கிநிறைவுபெறும் முக்கியமான பயனுள்ள புண்ணிய நாட்களாக அமையும். மனம், மொழி, மெய்களால் அம்மனை வழிபட்டு விரதமிருந்து ஆலய வழிபாடு செய்து திருமுறைகள் ஓதிமனத் தூய்மையுடன் சக்தியை வழிபாடு புரிபவர்கள் பாவங்களினின்றும்நீங்கிப் புண்ணியம்பெற்று இகம், பரம், வீடு என்ற மும்மை நலங்களையும் எளிதில் பெறுவார்கள். இந்தஆலயத்திற்குசென்றவர்கள்கோயிலின் அமைப்பிலும் சுற்றுப்புற சூழ்நிலையிலும் அம்மனின் சௌந்தரியத்திலும் அவளது அருள் கடாட்சத்திலும் ஐக்கியமாகி விடுவார்கள். அலைமோதும் உள்ளங்களுக்கு அமைதி அளித்து வழிகாட்டும் தெய்வமாக அன்னை விளங்குகிறாள்.

### துர்க்கா துரந்தரி

இக்கோயிலின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பவர் துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி என்ற தங்கம்மா அப்பாக்குட்டி ஆவார். இவரும் இவரதுவழிகாட்டலில்செயற்படும் பரிபாலன சபையினரும் பாராட்டத்தக்கவர்கள். தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் இன்று உலகப் புகழ் பூத்த சைவத் தமிழ் அறிஞராக விளங்குகின்றார். சகலராலும் மதிக்கப்படுபவர். முதிர்ந்த வயதிலும் 'என் கடன்பணி செய்துகிடப்பதே' என்று வாழ்பவர். இவரது நற்பணிகளுக்கெல்லாம் பொற்சேவையாற்றும் சைவத்தமிழ் அறிஞர்கள் யாவரும் போற்றத்தக்கவர்கள்.

இக் கோயிலில்நடைபெறும் சிறந்த விழாக்களில் நவராத்திரி விழாவும் ஒன்று. இதன் பின்வரும் விஜயதசமி தொடங்கி தீபாவளி முடியத் துர்க்கை அம்மனை தினமும் வழிபட்டு கௌரி நோன்பிருந்து பயனடையும்பெண்கள் பலர் இங்கு அபிராமிப்பட்டரின் திருநாளாக தை மாத அமாவாசை நாள்கொண்டாடப்படுகிறது. அன்று நடைபெறும் சிறப்புஆராதனையும் பாடப் பெறும் அபிராமி அந்தாதிப் பாடல்களும் உள்ளங்களை உருக்கி அம்மன் அருளில் ஒன்றச் செய்வன.

### நம்பிக்கை

ஆண்டு தோறும்பலவிழாக்கள் நடைபெறும். இக்கோயிலில் பக்தியுடன் வழிபட்டால் பல நன்மைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை பலருக்குண்டு. ஒன்பது வாரங்கள் சீலத்துடன் இருந்து செய்வாய்க்கிழமைகளில் விரதமேற்று அம்பாளைத் தரிசிக்கும் கன்னிப் பெண்களுக்கு திருமணம் கைகூடும் என்ற நம்பிக்கையுடன் பலர் வந்து வழிபடுவதைக் காணலாம்.

நாம் எவ்வளவு தவறுகள் செய்த போதிலும் எம்மை மன்னித்து அன்பு காட்டும் எமது தாய்போலஉலகமாதாவாகிய எமது அன்னை எமது தவறுகள் பாவங்களை மன்னித்து அருள் புரிவாள். நாம் அவளை எப்படி உபாசித்தாலும் அதனைஏற்றுக்கொண்டு எமக்கு அனுக்கிரகம் செய்வாள். துர்க்கை அம்மனின் திருப்பாதங்களில் நாமும் சரணடைந்து வாழ்வில் அனைத்து நலன்களையும் அடைவோமாக!

---

# நாட்டின் ஸ்திரமற்ற அரசியலுக்குத் தீர்வுகாண மிகவிரைவில் மாற்று வழிகளை முன்வைப்பேன்
## ஜனாதிபதி சந்திரிகா உறுதி

(கொழும்பு)

இன்று நாட்டில் உருவாகியுள்ள ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலைக்கு நிவர்த்திகாண்பதற்கு மாற்றுவழிகளைத் தான் கையாளப்போவதாகவும், அந்தமாற்றுவழிகளை அடுத்த சில தினங்களில் நாட்டுமக்களுக்கு அறிவிக்கப்போவதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நாட்டு நிலைமைகளை விளக்கி நடைபெற்ற கூட்டமொன்றிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமுர்த்தி முகாமையாளர்களுக்கும் சமுர்த்தி அதிகாரிகளுக்கும் இவ்விளக்கக் கூட்டம் நடத்தப்பட்டது.



தற்போது நீடிக்கும் அரசியல் ஸ்திரமற்ற சூழ்நிலையை மேலும் நீடிக்க விடப்போவதில்லை என்று கூறிய ஜனாதிபதி சந்திரிகா தற்போது நீடிக்கும் ஸ்திரமற்ற அரசியல் நிலையை மேலும் நீடிக்க விட்டால் அது அரசுக்கும், நாட்டுக்கும், மக்களுக்கும் நல்லதல்ல இந்நிலையை நாம் நீக்காவிட்டால் நாடு பாரதூரமான விளைவுகளையே சந்திக்க வேண்டி வரும்.

நெருக்கடியான சூழ்நிலையை சில தீய சக்திகள் பயன்படுத்தி செய்துவரும் பொய்ப்பிரச்சாரத்திற்கு மக்கள் நம்பி ஏமாறக் கூடாது. என்மீது விசுவாசமுள்ள அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும் தந்துள்ள இராஜினாமாக் கடிதங்களை ஏற்கப்போவதில்லை. இந்நிலையில் அரச உறுப்பினர்களின் வாய்களுக்குப் பூட்டுப் போடும் எந்த ஒரு முயற்சியிலும் அரசு இதுவரை ஈடுபடவில்லை.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு குறைந்தாலும் மக்கள் மத்தியில் எனது அரசுக்குப் பேராதரவு பெருகிவருகிறதை இங்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நாட்டின் எதிர்காலத்தை மனதில் கொண்டு அடுத்த சில தினங்களில் காத்திரமான முடிவு ஒன்றை எடுப்பதற்கு நான் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன்.

நாட்டில் பயங்கரவாதம் தலைஎடுக்கக் காரணமாக இருந்த பிரச்சினை தொடர்பாக ஒரு அரசியல் தீர்வைக் காண்பதற்கு எமது முயற்சி தொடரும் என்று ஜனாதிபதி கூறினார்.

(வ)

---

## சாயி அருளமுதம்



உடல் எடுத்து வரும் எல்லோருமே அவதாரங்கள் தான். அதாவது தெய்வீகத்தின் பிரவேசம் அல்லது தெய்வத்தின் வெளிப்பாடுகள் எனலாம். அப்படியானால் இராமர், கிருஷ்ணர், புத்தர், கிறிஸ்து ஆகியோரில் இருக்கும் விசேட தன்மை என்ன? அவர்களுடைய ஜனன தினங்களை மட்டும் ஏன் இப்படிப் பக்தியுடனும், உற்சாகத்துடனும் கொண்டாடுகிறீர்கள்? அவர்களிலுள்ளவிசேடம் இதுதான். ஸத்ய வஸ்துவான் ஆத்மாவை அவர்கள் அறிந்தவர்கள். நீங்கள் அறியாதவர்கள். கருணை, மகிமை, மாட்சிமை, தேஜஸ் ஆகியவற்றை அறிவுடைமை கொண்டிருக்கும். தளைகளிலிருந்தும் நேரம், இடம், காரணம், நித்திரை, சொப்பனம், விழிப்பு ஆகியவற்றிலிருந்தும் அது விடுதலையளிக்கும். அவதாரங்கள் எப்பொழுதும் தயார் நிலையிலும், அறிவுடனும் ஒளியுடனும் விளங்குவர்.

நன்றி
**நாளாந்த நற்சிந்தனை**

---

## சிறுவன் காயம்

(வவுனியா)

பரந்தன் ஐந்தாம்வாய்க்காலைச் சேர்ந்த பாலேந்திரன் தவக்குமார் (வயது10) என்ற சிறுவன் கட்டுத் துவக்கு வெடித்ததில் படுகாயத்துக்குள்ளாகி கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நேற்றுமுன்தினம் இடியன் துவக்கு வெடித்ததில் இடதுகையை இளந்தநிலையில் க. இரஞ்சித்குமார் (வயது 21) கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

(ம

# அரசின் இராணுவ நடவடிக்கையை அமெ. உன்னிப்பாக கவனிக்கிறது

## அந்நாட்டின் பேச்சாளர் தகவல்

(நியுயோர்க்)

இலங்கையில் தொடரும் இனப் பிரச்சினைத் தீர்வு காண அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டுமென்று அமெரிக்க இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் திலிப்ரேகர் இலங்கை அரசைக் கோரியுள்ளார்.

இலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினை தீர்வின்றி நீண்டகாலமாக இழுபடுகிறது

இந்நிலையில் இனப்பிரச்சினையை யுத்தத்தின் மூலம் ஒருபோதும் தீர்க்கமுடியாது இதனை இலங்கை அரசாங்கம் உணர்ந்துவிடுதலைப்புலிகளுடன் பேச்சு நடாத்திஇனப்பிரச்சினையை தீர்க்கவேண்டுமென்று திலிப் ரேகர் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளார்

அத்துடன் இலங்கை அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும். இதனை அமெரிக்கா உன்னிப்பாக அவதானிப்பதுடன் இலங்கையின் நிலவரம் குறித்து அமெரிக்க அரசு அக்கறையுடன் இருக்கிறது;

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் மேற்கொள்ளப்படும் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமரச முயற்சிகளை அமெரிக்கா வரவேற்பதாகவும், திலிப் ரேகர் மேலும்தெரிவித்தாரென பி.ரி.ஐ செய்திஸ்த்தாபனம் தகவல்வெளியிட்டுள்ளது. (இ)

## நூறாவது அகவை

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சைவப்பெரியார் சின்னத்தம்பி ஆறுமுகம் இம்மண்ணில் நூறு ஆண்டுகள் வாழ்ந்த மகிமையுடன் இன்று தனது நூறாவதுஅகவையைப் பூர்த்தி செய்கின்றார்;

நூற்றாண்டு கடந்து வாழும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் பழையமாணவரான இவர் 42 வருடங்கள் புகையிரத திணைக்களத்தில் பணியாற்றியவர், என்பதும் டாக்டர் திருநாவுக்கரசுவின் தந்தையார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது; (ந)

## புலிகள் - படையினர் மோதல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் மற்றும் எழுதுமட்டுவாள் பகுதிகளிலுள்ள முன்னரங்க நிலைகளில் நேற்று அதிகாலை புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்றுள்ளன;

மோதல் நடைபெற்ற இடங்களில் இருந்து காயமடைந்த படையினரை ஏற்றிச் செல்வதற்காக ஹெலிகள் அப்பகுதியில் அடிக்கடி இறங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-43,8

# அரசியல்நெருக்கடிக்குமுடிவுகட்டவே ரணிலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது

## அமைச்சரவையில் ஜனாதிபதி விளக்கம்

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைத்து தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா அனுப்பி வைத்த கடிதம் தொடர்பாக நேற்று அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி விளக்கமளித்தார்;

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அமைச்சர்களுக்கு விளக்கம் கூறுகையில், தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு முடிவு காண்பதற்கே தான் இந்தஅழைப்பை விடுக்குமாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவிடம் கோரியதாகவும் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இச் கூட்டத்தில் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைகுறித்து ஆராய - பிரதமர்ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தலைமையில் குழுவொன்றும் நியமிக்கபட்டுள்ளது இதில் அமைச்சின் செயலாளர்களும் அங்கம் பெற்றுள்ளனர்; (வ)

## ஐ.தே.கட்சி- -

கடந்த மாதம் 19ம்திகதி ஐ. தே கட்சியின் தலைமையில் அரசுக்கெதிராககொழும்பில் நடை பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் போது பொலிசார் மேற் கொண்ட நடவடிக்கையில் இரண்டு பேர் கொல்லப்பட்டதும் 78பேர் சாயங்களுக்குள்ளானதும் தெரிந்ததே. (வ-8)

## அரசுக்கெதிராக

பேரணியாகப் புறப்பட்டு கொழும்பு நகரசபைமைதானத்தை சென்றடைவர்

ஆர்ப்பாட்டப் பேரணிக்கும் எதிர்புக் கூட்டத்திற்கும் வேண்டிய சகலஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் இன்றுதிட்டமிட்டபடி அரசுக்கெதிரான பேரணியும் எதிர்ப்புக்கூட்டமும் நடத்தப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

நகரசபை மைதானத்தில் பேரணிமுடிவில் இடம்பெறும் எதிர்ப்புக்கூட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க,தமிழர் விடுதலைக்கூட்டணியின் உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஈ பி,ஆர் எல் எவ் சுரேஸ் பிறேமச்சந்திரன் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் மனோகணேசன் மற்றும் அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ் தலைவர் அ:விநாயகமூர்த்தி ஆகியோர் உரையாற்றுவர். (இ)

## புலிகள் தாக்குதல் சிப்பாய் பலி

(வவுனியா)

வெலியோயா இராணுவ முகாம் முன்னரங்க காவலரண் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார். (இ)

# ஊழல் நிரூபிக்கப்பட்டால் அரசியலை துறக்கத்தயார்

## திஸநாயக்கா ஜனாதிபதிக்கு கடிதம்

[கொழும்பு]

சமுர்த்தி அமைச்சின் கீழ் உள்ள கட்டணச் சேமிப்புத் திட்டத்தில் ஊழல் இடம் பெற்றிருப்பது நிரூபிக்கப்பட்டால் அமைச்சர் பதவியில் இருந்தும் அரசியலில் இருந்தும் விலகத்தயாராக இருப்பதாக அமைச்சர் எஸ்.பி திஸநாயக்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்;

சமுர்த்தி அமைச்சில் சில ஊழல்கள் மோசடிகள் நடைபெற்றுள்ளதாகவும் அவற்றை விசாரிக்கப் போவதாகவும் ஜனாதிபதி அமைச்சர் எஸ்.பி திஸநாயக்காவுக்கு நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருந்தார். அக் கடிதத்திற்குப் பதிலளிக்கும் முகமாகவே அமைச்சர் திஸநாயக்கா நேற்று இக் கடிதத்தினை எழுதியுள்ளார். அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

மோசடிகள், ஊழல்கள் இடம்பெற்றிருந்தால் உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், அப்போதுதான் மக்களுக்கு உண்மைநிலை தெரியும் என்றும் அமைச்சர் கூறினார்; [வ]

## நாளை கொடியேற்றம் கொடித்தம்பம் மறைவு!

### கோண்டாவிலில் சம்பவம்

(கோண்டாவில்)

கோண்டாவில்மேற்கு மகாகணபதி தேவஸ்தானத்தின் கொடித்தம்பம் நேற்று இனந்தெரியாதோரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது;

இவ்ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இவ்வேளையில் கொடித்தம்பம் தூக்கிச்செல்லப்பட்டுள்ளது.

ஆலயக்குருவுக்கும் ஆலய பரிபாலன சபைக்கும் இடையில் உள்ள மனக்கசப்பே கொடித்தம்பம் எடுத்துச்செல்லக் காரணமாக இருக்கலாமென அப்பகுதி மக்களால் பேசப்படுகிறது;

இதேவேளை கொடித்தம்பம் காணாமல் போனமை தொடர்பாக ஆலயத்தின் பிரதம குருவால் கோப்பாய் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது; (இ-5)

## வேலணையில்

23வயது மதிக்கத்தக்க இவ் ஆணின் சடலம் இனங்காணும் பொருட்டு ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் யாழ்; போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது; (ந- 10)

## 2006 ம். .

இடம்பெற்றால் அவர்கள் மீது உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

எவர் மீதும் பாரபட்சம் காட்டப்பட மாட்டாது என்று கூறிய ஜனாதிபதி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு 109 க்கு மேற்பட்டபாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு உண்டு

## அமைச்சர். .

த்தி இளைஞர் விவகார அமைச்சர் எஸ். பி. திஸநா

## காபந்து...

அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர்; கூட்டத்தில்கலந்து கொண்ட ஏனையஎதிரணித் தலைவர்களும் பிரதமரின் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

காபந்து அரசுஒன்று அமைக்கப்பட்டு 5சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்து தேர்தல்நடத்த வேண்டுமென்றும் சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச்செய்ய வேண்டுமென்றும் கோரிதமது ஒருமித்த பதிலைபிரதமருக்கு அனுப்பிவைப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது

சபாநாயகர் நாடுதிரும்பியதும், செப்ரெம்பர் 7ம்திகதி

# அமைச்சர்கள் மூவர் விரைவில் வன்னி பயணம்

(கொழும்பு)

வன்னி சென்று விடுதலைப்

கான நடவடிக்கை எடுக்கப் பட்டுவருகிறது;

இன்னும் பக்க தினங்களுக்

செல்லப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இவ்வேளையில் கொடித்தம்பம் தூக்கிச்செல்லப்பட்டுள்ளது.

ஆலயக்குருவுக்கும் ஆலய

பேசப்படுகிறது.

இதேவேளை கொடித்தம்பம் காணாமல் போனமை தொடர்பாக ஆலயத்தின் பிரதம குருவால் கோப்பாய் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

# அமைச்சர்கள் மூவர் விரைவில் வன்னி பயணம்

(கொழும்பு)

வன்னி சென்று விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத்துவதற்காக சிரேஷ்ட அமைச்சர்கள் மூவர் முயன்று வருவதாக அமைச்சர் மட்டத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னிக்கு செல்வதற்கான பயண ஏற்பாட்டின் முன் முயற்சியை மேற்கொள்ளும் முகமாக ஜனாதிபதி மற்றும் விடுதலைப்புலிகள் அமைப்பினரிடமும் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இன்னும் பத்து தினங்களுக்குள் பயணம் இடம்பெறவுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக இம் முயற்சியை மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இம் முயற்சியற்சியில் ஏற்கனவே ஈடுபட்டதும் தெரிந்ததே. (க)


## 100-வருட பிறந்தநாள் வாழ்த்து

**டாக்டர் ஆ. திருநாவுக்கரசு**

அவர்களின் அன்புத்தந்தையார்

**உயர்திரு சின்னத்தம்பி ஆறுமுகம்**

அவர்களின் 100-வது பிறந்ததினத்தில், அவர்களை வாழ்த்திப் போற்றுகின்றோம்

இ. சற்குருநாதன் குடும்பம்

கொட்டடி.


வற்றுறைப் பொலிஸாரால் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந- 10)

---

### 2006 ம்..

இடம்பெற்றால் அவர்கள் மீது உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

எவர் மீதும் பாரபட்சம் காட்டப்பட மாட்டாது என்று கூறிய ஜனாதிபதி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு 109 க்கு மேற்பட்டபாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு உண்டு

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 89ஆசனங்கள் மட்டுமேஉண்டு என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (வ)

---

### கண்ணிவெடி

இதேவேளை இச்சம்பவம் நடைபெறுவதற்கு சற்றுமுன் அப்பகுதியில் கடற்படையினரின் வாகனத் தொடரணி ஒன்று சென்றதாகவும், கடற்படையினர் சென்ற வாகன அணிக்கு குறிவைக்கப்பட்ட கண்ணிவெடியே இலக்குத் தவறி வெடித்திருக்கலாமென்றும் கிழக்குமாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் வோறன்ஸ்சமரசேன தெரிவித்துள்ளார். (ந-8)

---

### அமைச்சரவைக்

பதியே அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்துவெளிநடப்புச் செய்தமை பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

இதேவேளை நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் எஸ்.பி திஸநாயக்கவும் கலந்துகொண்டாரென ஊர்ஜிதமற்ற செய்தியொன்று தகவல் வெளியிட்டுள்ளது. (இ)

முகமாகவே அமைச்சர் திஸநாயக்கா நேற்று இக் கடிதத்தினை எழுதியுள்ளார். அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

மோசடிகள், ஊழல்கள் இடம்பெற்றிருந்தால் உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், அப்போதுதான் மக்களுக்கு உண்மைநிலை தெரியும் என்றும் அமைச்சர் கூறினார். (வ)

---

### அமைச்சர்..

த்தி இளைஞர் விவகார அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா கலந்து கொள்கிறார் என்ற அதிரடிச் செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இன்றைய ஆர்ப்பாட்டத்திலும் எதிர்ப்புக் கூட்டத்திலும், மக்களை கலந்து கொள்ள வேண்டாமென அரசாங்கம் பிரசாரம் செய்து வருகிறது. ஆனால் மக்களை ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு எதிர்க் கட்சிகள் கோருவதுடன் எது நடப்பினும் ஆர்ப்பாட்டமும் எதிர்ப்புக் கூட்டமும் நடைபெறுமென்று உறுதிபடத் தெரிவித்துள்ளன.

அத்துடன் அரசுக்கு எதிரான எதிர்க் கட்சிகளின் போராட்டத்தில் ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் எஸ்.பி திஸநாயக்காவும் கலந்து கொள்கிறார். என எதிர்க்கட்சிகளால் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

சந்திரிகாவுடன் மனக்கசப்பில் இருக்கும் அமைச்சர் திஸநாயக்கா இன்று அரசுக்கு எதிரான எதிர்க் கட்சிகளின் போராட்டத்தில் போர்க்கொடி தூக்கினாலும்ஆச்சரியப்படுவதற்கில்லை யென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர் (இ)

வித்தனர். கூட்டத்தில்கலந்து கொண்ட ஏனையஎதிரணித் தலைவர்களும் பிரதமரின் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

காபந்து அரசுஒன்று அமைக்கப்பட்டு 5சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்து தேர்தல்நடத்த வேண்டுமென்றும் சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச்செய்ய வேண்டுமென்றும் கோரிதமது ஒருமித்த பதிலைபிரதமருக்கு அனுப்பிவைப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது

சபாநாயகர் நாடுதிரும்பியதும், செப்ரெம்பர் 7ம்திகதி கூடவுள்ள பாராளுமன்றத்தின் அமர்வுகள் பற்றிய நிகழ்ச்சிநிரல் தொடர்பாகவும், மீண்டும் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கவேண்டாம் என்று சபாநாயகரைக் கோருவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பியுமான அ. விநாயகமூர்த்தி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும், யாழ் மாவட்ட எம்பியுமான வீ. ஆனந்தசங்கரி, ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட எம்.பியுமான செல்வம் அடைக்கல நாதன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இத்தீர்மானங்கள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா மூலம்ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படுமென்றும் ஜனாதிபதி சந்திரிகாவுடனேயே பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதென்றும் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார் (வ)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.